2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***7229—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாது தன்னுடைய செயல் திட்டங்களால் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனங்களில் நீங்காத இடம் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். கழகப் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும், கழக துணைப் பொதுச் செயலாளர் அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி கிராமப்புறங்கள் நிறைந்த மலைப் பகுதியாகும். தமிழக மக்களுடைய நலனுக்காக தமிழக கிராமப்புற வளர்ச்சிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களை மனதில் நிறுத்தி, கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சிக்காக பவானிசாகர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்க கனிவோடு பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில், ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டு அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 12 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என மொத்தம் 15 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கருமாண்டிசெல்லிப்பாளையம் கிராமத்தில் 2012—2013 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்கப்பட்டு, அக்கல்லூரிக்கான புதிய கட்டடமும் வழங்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 30—11—2015 அன்று திறந்து வைக்கப்பட்டு, தற்போது அந்தக் கல்லூரி சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

மேலும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் தாலுகா, நாச்சிமுத்துபுரத்தில் சக்தி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கவுந்தபாடியில் இ.ஜ.டி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என இரண்டு அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 2015—2016 ஆம் ஆண்டில் 300 மாணவ, மாணவியர் பயிலும் வகையில் சேர்க்கை இடங்கள் ஒப்பளிக்கப்பட்டிருந்தன.

2017 மார்ச் 23]

இவற்றில் 246 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டன. 54 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. 2016–2017 ஆம் ஆண்டில் 90 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் பூர்த்தியாகவில்லை. அவை காலியாக இருக்கின்றன. அதேபோல் அரசு உதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 2015–2016 ஆம் ஆண்டில் 297 இடங்கள் காலியாக உள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில் 286 இடங்கள் காலியாக உள்ளன.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கெல்லாம் புதிதாகக் கல்லூரிகள் வேண்டுமோ அங்கெல்லாம் கல்லூரிகளை வழங்கி, கடந்த 2011–2016 ஆட்சிக் காலத்தில் ஏழை எளிய மாணவர்கள் படிக்கின்ற வகையில் வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளார்கள். அந்த வகையில் பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பகுதியில் புதிதாக ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியினைத் தொடங்குவதற்கான கோரிக்கையை தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழி தொடர்கின்ற இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையினை பரிசீலனை செய்து, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமாறு கோரி, என் நன்றியையும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டு, 7 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்று வரையில் அது அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாகவே செயல்பட்டு வருகிறது. இதனால் அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள், மேல் படிப்பிற்காக வெளிநாடுகளுக்குச்*

செல்கின்றபோது, All India Council for Technical Education என்கின்ற website-ஐ பார்க்கின்றபோது அந்தக் கல்லூரி அங்கீகாரம் பெறப்படாத கல்லூரியாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. எனவே, அதற்கான அனுமதியை இந்த அரசாங்கம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிரந்தர ஆசிரியர் பணியிடங்கள் காலியாகவே இருந்து கொண்டிருக்கின்றன. அதேபோன்று, 1-8-2012 முதல் அங்கு பணியாற்றக்கூடிய நிரந்தர ஆசிரியர்கள் ஊதிய உயர்வு இல்லாமல் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கும் அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதனை உடனடியாகச் சீர் செய்து, மாணவர்களது வாழ்க்கையை பாதுகாக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அரசு இவற்றை செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கல்லூரியானது, அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் உறுப்புக் கல்லூரியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத அளவிற்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பாக அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண சமூக மக்களுடைய மாணவர்கள் படிக்கக்கூடிய பகுதி. 12 ஆம் வகுப்பிற்குமேல் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகளே இல்லை. 12 அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் பகுதிகளில்தான் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த அரசின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்*

2017 மார்ச் 23]

சிறப்பான கவனத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்குமேல் மேற்கொண்டு படிக்க முடியாமல் அந்த மாணவர்கள் மீண்டும் விவசாயக் கூலி வேலைக்கு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த 2011 முதல் 2016 வரையிலான ஆட்சிக் காலம் உயர் கல்வியில் ஒரு மிகச் சிறந்த பொற்காலமாகவே திகழ்ந்தது என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களால் எங்கெங்கு புதிதாகக் கல்லூரிகள் தேவைப்பட்டனவோ அங்கெல்லாம் 67 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டு, ஒரு வரலாற்றுச் சாதனையை படைத்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏழையெளிய மாணவர்கள் அத்தனைபேரும் அவர்கள் விரும்புகின்ற பாடப் பிரிவில் சேர வேண்டுமென்பதற்காக புதிதாக 959 பாடப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுகின்ற வகையில், இந்தியாவே இன்றைக்கு தமிழ்நாட்டை திரும்பிப் பார்க்கின்ற வகையில், உயர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசாகும். இந்தியா முழுவதும் மாணவர்கள் சேர்க்கை 23.6 சதவிகிதமாக இருந்தாலும்கூட தமிழகத்தில் 44.3 சதவிகிதமாக உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் தேவையிருப்பின் ஆய்வு செய்து, பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*